தி.மு.க. வினரின் தொலைபேசி பேச்சுகள் ஒட்டு கேட்கப்படுகின்றது!

சிங்கம் புனரி பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் பேச்சு - ஆர். எஸ். பாரதி

சிவகங்கை,ஏப்.2-

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி பேரூர் மற்றும் ஒன்றிய கழகத்தின் சார்பில் தமிழக முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம். பூமிநாதன் கே. பாலசுப்பிரமணியன் தலைமையில் பொதுக்குழு உறுப்பினர்கள் பேரூராட்சி மன்ற தலைவர்என். அம்பலமுத்து எம். சோமசுந்தரம், துணைத் தலைவர் இந்தியன் செந்தில் குமார், முன்னாள் ஒன்றிய செயலாளர்ஏ.எல்.சந்தி ரன், ஜமாத் தலைவர் மு. ராஜா முகமது ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. சிங்கம் புனரி பேருர் கழக செயலாளர் டி கதிர் வேல் வரவேற்று பேசினார் .இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேசியதாவது . தமிழகத்தில் 1962 முதல் மொழி எதிர்ப்பு போராட்டம் நடைபெற்று வருகிறது. . இதில் இந்தி மொழியை 1962ல் திணிக்க வந்த பொழுது இந்த போராட்டம் தீவிரமானது. இந்தியாவிலேயே மொழிக்காக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிர் நீத்த சம்பவம் தமிழகத்தில் தான் நடைபெற்றது .தமிழ் மொழி மிகவும் பழமையான தொன்மையான நாகரீகமான மொழியாகும் . மொழிக்கு என்று தமிழ் மொழிக்கு என்று தமிழகத்தில் ஒரு வரலாறு உள்ளது. இதை வரலாறு தெரியாமல் பா.ஜ.க .ஒன்றிய அரசு இந்தியை திணிக்க முயற்சிக்கிறது. இந்த முயற்சி தமிழகத்தில் எடுபடாது.

பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் ஆகியோர் மொழியை பாதுகாப்பதில் தீவிரமாக இருந்தார்கள். பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் வழியில் தளபதி அவர்கள் மொழிக்காக பல்வேறு முன்னெடுப்புகளை செய்து வருகிறார். தமிழகத்தில் முதல்வர் மக்களாட்சியினை நடத்தி வருகிறார் . ஒன்றிய பா.ஜ.க

அரசிற்கு பிடிக்க வில்லை. எரிச்சலாக உள்ளது .இதனால் பல்வேறு வகையில் இடையூறுகளை செய்து வருகிறார்கள் . உத்தரப்பிரதேசம் ,பீகார் , மற்றும் வடமாநிலங்களில் மாநிலங்களுக்கு அதிக அளவில் நிதியை தருகிறார்கள் .நாம் அதிக அளவில் வரியை செலுத்தினாலும் நமக்கு உரிய நிதியினை தருவதில்லை .மேலும் ஒன்றிய அரசு நமக்கு தரவேண்டிய கல்விக்கான நிதி, தேசிய ஊரக வேலைவாய்ப்பு நிதி மற்றும் பல்வேறு நிதிகளை வழங்காமல் வஞ்சகம் செய்து வருகிறார்கள்.

இவர்களின் வஞ்சகத்தினை மக்கள் நன்கு புரிந்து கொள்கிறார்கள். நாம் இப்பொழுது முதலே தேர்தல் பணிகளை தொடங்கிட வேண்டும். .2026 ல் முதல்வர் தளபதி தலைமையில் ஏழாவது முறையாக கழக ஆட்சியும் இரண்டாவது முறையாக கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் ஆட்சியும் அமையவேண்டும். முனைப்புடன் தேர்தல் பணியாற்ற வேண்டும் கடந்த நான்காண்டுகளில் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சி சாதனைகளை கிராமங்கள்தோறும் சென்று எடுத்து கூற வேண்டும். மகளிர் இலவச விடியல் பயணம் மகளிருக்கான உரிமை தொகை,கல்லூரி படிக்கும் மாணவ மாணவிக்கான கல்வி உதவித் தொகை அதிக அளவில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தலைவர் கலைஞர் வழியில் தளபதி அவர்கள் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் .நம்முடைய தேர்தல் அறிக்கையில் 90% வாக்குறுதிகளையும் நிறைவேற்றி உள்ளோம். இதை நாம் கிராம மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். இதன் மூலம் அதிக அளவில் வாக்குகளை பெற முடியும் . நமது ஆதரவில் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினரான பாஜகவைச் சேர்ந்த ஹெச். ராஜா இன்று நம்மையும் கழகத்தையும் நமது தலைவரையும் இழிவாக பேசி வருகிறார்.

இதற்கு முன் கழகத்தை அழிப்போம் கழகத்தை ஒழித்து விடுவோம் என்று கூறிய வர்கள்யாரும் இப்பொழுது இல்லை. இருந்த இடம் தெரியாமல் போய் விட்டார்கள். நம்முடைய தயவில் இன்று பா.ஜ.க. ஹெச்.ராஜா மாதந்தோறும் 30 ஆயிரம் ரூபாய் ஒய்வூதியத் தொகை பெற்று வருகிறார். எனவே அவர் மனசாட்சியுடன் பேச வேண்டும். நம்முடைய கழகத்தினர் அமைச்சர் முதல் பல்வேறு கழக நிர்வாகிகள் வரை தொலைபேசியில் பேசுவதை தவிர்க்க வேண்டும். செல்போனில் பேசுவதை மத்திய பாஜக அரசு தகவல் சேகரிக்கிறது. ஒட்டு கேட்கிறது .இதன் மூலம் கழகத்தை பிளவுபடுத்த வேண்டும் என்று சூழ்ச்சி செய்கிறது. இந்த சூழ்ச்சி எடுபடாது. எத்தனையோ இன்னல்களை சந்தித்து இயன்றளவில் கழகம் வளர்ந்து வருகிறது . கழகத்திற்கு மக்கள் ஆதரவு அதிகரித்து வருகிறது. இது பா.ஜ.கவிற்கு பிடிக்கவில்லை. தலைவர் கழக தலைவர் தளபதி அவர்கள் ஆட்சி அமைவதற்கான பணியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். .இவ்வாறு ஆர்.எஸ். பாரதி பேசினார். கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டுறவுத்துறை அமைச்சரும் மாவட்டக் கழகச் செயலாளருமான கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது. கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் பிறந்த நாள் மார்ச் ஒன்றில் துவங்கி ஆண்டு தோறும் ஓர் ஆண்டுக்கு நம்முடைய மாவட்டத்தில் கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக மாவட்டம் மு ழுவதும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. தற்போது அரசின் சாதனைகளை எடுத்துக் கூறும் வகையில் பொதுக்கூட்டங்கள் நடைபெற்று வருகின்றது. தமிழர்களின் உரிமைகளை காப்பதற்காக துவக்கப்பட்ட இயக்கம் தான் திராவிட இயக்கமாகும். ஆட்சியில் அமர வேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்ற கழகம் துவங்கப்படவில்லை.

தமிழ் மொழி தமிழர்களின் வளர்ச்சி தமிழர்களின் பண்பாடு நாகரிகம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகவே திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கப்பட்டது . சமூக சீர் திருத்த இயக்கமாக செயல்படும் என்று அறிவித்தார்கள் பின்பு கழக முன்னோடிகள்,கழக நிர்வாகி கள் நாம் ஆட்சியில் இருந்தால் தான் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியும் என்று கூறினார்கள். திருச்சியில் வாக்குப்பெட்டி வைத்து அரசின் பங்கு கொள்ளலாம் என்று முடிவினை எடுத்தார். அது முதல் நாம் 1967 முதல் தொடர்ந்து ஆட்சியில் பொறுப்பேற்று மக்கள் பணி ஆற்றி வருகின்றோம். மக்கள் நல திட்டங்களை செயலாற்றி வருகின்றோம். கழக ஆட்சி அமைந்ததும் தான் தமிழகத்தில் அனைத்துதர மக்களுக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் செய்யப்பட்டு வருகின்றது . பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் வழியில் கழகத் தலைவர் தளபதி அ வர்கள் அவர்கள் நினைத்ததை செயல்படுத்தி வருகிறார். 75 ஆண்டுகளாக கொள்கை மாறாத இயக்கமாக கொள்கை குறிப்புடன் இந்த கட்சி நடைபெற்று வருகின்றது. மாநிலத்தின் உரிமைகளையும் மாநில பிரச்சினைகளை என்றும் விட்டுக் கொடுத்ததில்லை. எதற்காகவும் யாருக்காகவும் விட்டுக் கொடுக்கவில்லை . தமிழகத்திற்கு பாதிப்பு வரும்பொழுது முதல் குரல் கழகத்தின் குரலாக ஒலிக்கும். இந்தியாவின் ஜனநாயகத்திற்கு ஆபத்து வரும்பொழுது அதை எதிர்த்து முதல் குரல் கொடுப்பது கழகம். முன்பு தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்திலிருந்து அரசியல் என்ன கூறுகிறார் என்பதை இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் தலைவர்களும் உற்று நோக்கினார்கள் .அதே வழியில் கழகத் தலைவர் தளபதி அவர்களும் இன்று கூறுவதை அகில இந்திய அரசியல் தலைவர்கள் எதிர்பார்த்து உள்ளார்கள் . இத்தகைய வளர்ச்சியை பொறுக்காத ஒன்றிய பா.ஜ.க அரசு நம்மை பல விதங்களில் வஞ்சிக்கிறது. புதிய கல்வித் கொள்கை, தொகுதி மறுசீரமைப்பு , மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மற்றும் பல்வேறு வகையில் நமக்கு நிதி தரா மல் நம்மை வஞ்சித்து வருகிறார்கள். கழகத்திற்கு என்று ஒரு தனியான ஒரு வரலாறு உள்ளது .தி.மு.க மாநில கட்சியாக இருந்தாலும் அகில இந்திய அளவில் இன்று அனைத்து அரசியல் கட்சிகளும் நம்மை உற்றுநோக்கும் வகையில் கழக தலைவர் தளபதி செயல்பாடுகள் அமைந்துள்ளது. இது ஒட்டுமொத்த தமிழருக்கான பெருமை ஆகும் .தமிழகம் கல்வி தொழில்துறை மற்றும் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கி வருகிறது. முன்னேற்றம் அடைந்து வருகிறது இதை ஒன்றிய பா.ஜ.கவினால் பொறுத்துக்கொள்ளமுடியவில்லை. இதனால் தமிழ்நாட்டிற்கு பல்வேறு அநீதிகளையும் நமக்கு தர வேண்டிய நிதியை தராமல் இருந்து வருகிறார்கள். சிறுபான்மை இன மக்களுக்கு பல்வேறு வகையில் இடையூறுகளை ஏற்படுத்துகிறார்கள் . ஒன்றிய அரசு கொண்டுவந்த புதிய வக்பு வாரிய சட்ட திருத்தத் திற்கு பாராளுமன்றத்தில் . அ.தி.மு.க ஆதரித்து வாக்களித்தது. அதனால்வக்பு வாரிய சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. ஆனால் முதல்வர் கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் தமிழக சட்டமன்றத்தில் வக்பு வாரிய சட்டத்தை திரும்ப பெறுவது என்று தீர்மானம் நிறைவேற்றி உள்ளார் .சிறுபான்மை இன மக்களை பாதுகாக்கும் அரசாக கழக அரசு விளங்கி வருகின்றது. தொகுதி மறுசீரமைப்பில் நமக்கு ஏற்படும் பாதிப்புகளை உணர்ந்திடும் வகையில் 10க்கும் மேற்பட்ட முதல் வர்கள், துணை முதல்வர்கள் ,பல்வேறு அரசியல் கட்சித் தலைவர் கள் கொண்ட கூட்டத்தினை மார்ச் 22ஆம் தேதி நடத்தினார். அந்த தொகுதி மறுசீரமைப்பில் 25 ஆண்டுகளுக்கு மறுசீரமைப்பு கூடாது என்ற தீர்மானத்தினை முன்மொழிந்துள்ளார் .

இது இன்று இந்திய அளவில் மிகவும் வரவேற்பு பெற்றுள்ளது .தொகுதி மறுசிரமைப்பு என்பது 2026 ல் தான் வருகிறது . இப்பொழுது ஏன் இதை முதல்வர் எதிர்க்கிறார் என்று ஒரு சில அரசியல் கட்சிகள் கூறுகின்றனர்.

இப்பொழுது அதற்கான முயற்சிகளை முன்னெடுப்புகளை மேற்கொண் டால் தான் தொகுதி மறுசீரமைப்பில் தமிழகத்தில் பாராளுமன்ற தொகுதிகள் குறைய வாய்ப்புள்ளது. குடும்ப கட்டுப்பாடு திட்டத்தினை மக்கள் தொகை பெருக்கத்தை நாம் குறைத்ததால் நமக்கு தொகுதிகள் அதிகரிக்க வேண்டுமே ஒழிய தொகுதிகள் எந்த விதத்திலும் குறைய கூடாது. அதை முதல்வர் அவர்கள் அனுமதிக்க மாட்டார். அதற்கான முன்னெடுப்புகளை பல்வேறு மாநிலங்கள் ஆதரவு தருவது மூலம் நாம் தெரிந்து கொள்ள முடியும் .பிரதமர்ஷ இந்திரா காந்தியுடன் தலைவர் கலைஞர் அவர்கள் மிகவும் நெருங்கி பழகி வந்தார். ஆனால் இந்திரா காந்தி நெருக்கடி நிலை கொண்டு வந்த பொழுது அதை முதலில் எதிர்த்து குரல் கொடுத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆவார் .அதை எதிர்த்து கலைஞர் அவர்கள் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான ஆதரவினை திரட்டி வந்தார் .தி.மு.கவை பொறுத்தவரை ஆட்சிக்காக எவ்வித கொள்கையில் சமரசம் ஏற்பட்டதில்லை. கொள்கையையும் கழகத்தையும் என்றும் பிரித்துப் பார்க்க முடியாது .12 ஆண்டுகள் கழகம் எதிர்க்கட்சியதாக இருந்த பொழுதும் தமிழகத்தின் உரிமைகளை பாதுகாப்பதற்காக பல்வேறு போராட்டங்களை முன்னேடுத்து நடத்தியது .பத்தாண்டு அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகத்தின் உரிமைகள் பறிபோய்விட்டது. மாநில சுயாட்சி பறிபோனது .பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டது. முதல்வராக ஜெயலலிதா இருந்த போது தமிழத்திற்காக எந்தவித உரிமைகளையும் விட்டுக் கொடுக்க தயாராக இல்லை .எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக வந்த பொழுது நான்கரை ஆண்டுகளில் தமிழகத்தை அடகு வைத்து விட்டார் .ஆனால் தமிழக மக்களின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கும் இயக்கமாக கழகத் தலைவர் தளபதி அவர்கள் விளங்கி வருகிறார்கள்.

இதை மக்களும் நன்றாக கூர்ந்து கவனித்து வருகிறார்கள். தளபதி அவர்கள் எடுக்கும் எந்த முயற்சிக்கும் தமிழக மக்கள் தங்களுடைய ஆதரவினை தொடர்ந்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று இந்திய அளவில் பாஜகவிற்கு கழகத்தில் முதல்வர்அவர்கள் சிம்ம சொப்பனமாக விளங்கி வருகிறார் .மொழி, இனம் கலாச்சாரம் பண்பாடு ஆகியவற்றை பாதுகாப்பதில் கழக தலைவர் தளபதிஅவர்கள் முதல் ஆளாக இன்று அதை செயல்படுத்தி வருகிறார்.

நடைபெற உள்ள 2026 சட்டமன்ற தேர்தலில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதியிலும் கழகம் தலைமையிலான கூட்டணி கட்சிகள் வெற்றி பெற நாம் நமது பணியினை மேற்கொள்ள வேண்டும் . அதற்கு இப்பொழுதே நாம் தயாராக வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் பேசினார் .

இந்த பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தலைமை கழக பேச்சாளர் சூர்யா வெற்றிகொண்டான் , மாவட்ட அவைத் வழக்கறிஞர் அ.கணேசன் ,மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் , ஒன்றிய செயலாளர் எஸ் புதூர் ஒன்றிய செயலாளர் செல்வராஜ் ,பேரூர் கழக செயலாளர் கே. பி. எஸ் .பழனியப்பன் ஆகியோர் பேசினார்கள். இந்த பொதுக்கூட்டத்தில் ஒன்றிய,பேருர் கழக நிர்வாகிகள் சிவபுரிசேகர், சிவக்குமார் ஷீலா சொக்கநாதன், அயலக அணி துணைஅமைப்பாளர் ஆர் புகழேந்தி, ஒன்றிய பொருளாளர் பாஸ்கரன், நகர பொருளாளர் செந்தில் கிருஷ்ணன், சொக்கநாதன், சின்னய்யா, பாஸ்கரன்,

மனோகரன் நீல கிருஸ்ணன், ஏ ஆர் புகழேந்தி, ஞானசேகரன்,உத்தமி பாண்டியன் ,ஆர் . ஆனந்த கிருஷ்ணன் , மு . கோபால கண்ணன் வழக்கறிஞரனி எஸ்.பாஸ்கரன், ஆதி. அழகர்சாமி,பி. எல் .துரை வேலன் , காட்டு ராஜா, முருகன், எம். மகேந்திரன், எஸ் ராமநாதன் ,மகளிரணி நிர்மலா சையது, பேரருராட்சி கவுன்சிலர்கள் முகமது நிஷா ஷேக் அப்துல்லா, ஜெயசித்ரா சத்யா சக்தி மூர்த்தி வள்ளி மனோகரன் தேனாம்பால் ஜெயக்குமார் தனசேகரி சோமசுந்தரம் சங்கர் மணி சேகரன் ராமலட்சுமி ஞானி செந்தில் கக்கன் ராஜா திவ்யா பிரேம்குமார் காரைக்குடி மாநகரச் செயலாளர் துணை மேயர் நா.குணசேகரன் ஒன்றிய செயலாளர் திருமலை முத்துராமலிங்கம் தொ.மு.ச. முருகேசன் உட்பட ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். ஒன்றிய துணைச் செயலாளர் கள் எஸ் முத்துக்குமார் சிவபுரி சேகர் ஆகியோர் நன்றி கூறினார்கள். பொதுக் கூட்டத்துக்கான ஏற்பாடுகளை பேருர் கழகச் செயலாளர் தி. கதிர்வேல், ஒன்றிய செயலாளர் கள் பூமிநாதன், கே பாலசுப்பிரமணிய ன் தலைமையில் ஒன்றிய நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்பூனரியில் நடைபெற்ற கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை ஆற்றினார். மேடையில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தலைமைக்கழக பேச்சாளர் சூர்யா வெற்றிகொண்டான்,மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், ஒன்றிய செயலாளர்கள் பூமணி,கே.பாலசுப்பிரமணியன், பேரூர்கழக செயலாளர் தி.கதிர்வேல் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

ஒட்டப்பிடாரம் தொகுதி-

பண்டாரம்பட்டி கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைத்திடுவீர்!

சட்டப்பேரவையில் – எம்.சி. சண்முகையா வலியுறுத்தல்!

சென்னை, ஏப்.2-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

எம்.சி. சண்முகையா: ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில், தூத்துக்குடி தாலுகா, மறவன்மடம் ஊராட்சியில் 110 kilovolt துணை மின் நிலையம் அமைக்கப்படவுள்ளது. அதற்காக tender கோரப்பட்டுள்ளது. மீண்டும் பண்டாரம்பட்டி கிராமத்தில் குறைந்த மின்னழுத்தம் உள்ளதால், மின்துறை அமைச்சர் புதிய மின்மாற்றி அமைத்துத் தருவாரா?

அமைச்சர் வி. செந்தில் பாலாஜி: ஒட்டப்பிடாரம் தொகுதியில் இரண்டு துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதில் ஒரு துணை மின் நிலையத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மற்றொரு துணை மின் நிலையத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, அந்தப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். புதிய மின்மாற்றி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். இந்த வாரம், துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி, அங்கே ஆய்வு செய்து, தேவையேற்படின் அது மாற்றி அமைக்கப்படும் உறுப்பினர் அவர்களுக்குத் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

அருப்புக்கோட்டையில் பொருட்காட்சியை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் திறந்து வைத்தார். உடன் முன்னாள் சேர்மன் சுப்புராஜ், சிவப்பிரகாசம் சுந்தரலட்சுமி, நகரச் செயலாளர் ஏ.கே.மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

தொகுதிகள்தோறும் வாக்குச்சாவடிபாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்!

நெல்லை.ஏப்.2-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட பாளையங்கோட்டை, திருநெல்வேலி ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் வாக்குசாவடி பாகமுகவர்களின் (BLA2)ஆலோசனை கூட்டம் (31.03.25 அன்று) பாளையங்கோட்டை வ.உ.சி மைதானம் அருகில் உள்ள பி.பி.எல். திருமண மண்டபத்தில் மத்திய மாவட்ட துணை செயலாளர் எஸ். வி.சுரேஷ் தலைமையில் மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர், பாளை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் பங்கேற்று பேசியதாவது.

திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் இன்று தொகுதி வாரியாக என்னென்ன நலத்திட்டங்கள் தேவை என்பதை அறிந்து ஏராளமான திட்டங்களை வழங்கி வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் 234 தொகுதிகளில் 200 தொகுதியில் வெற்றி பெற வேண்டும் என கூறியுள்ளார்கள். தற்போது உள்ள நிலையில் 234 தொகுதிகளிலும் தி.மு.க.வெற்றி பெறும் சூழல் உள்ளது. அனைத்து தொகுதிகளிலும் திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேட்பாளராக நிற்கிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்கள். நம்மிடம் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் நேரு அவர்கள் கூறியது போல் நெல்லை மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்ற தொகுதிகளையும் நாம் கைப்பற்ற வேண்டும். என்பதை உணர்ந்து நாம் அனைவரும் அயராது உழைத்து ஒற்றுமையாக பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழவில் மாநகராட்சி மேயர்.கோ. ராமகிருஷ்ணன்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் என். மாலைராஜா,மாநில நெசவாளரணி செயலாளர் சொ.பெருமாள்,மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ராஜவர்மன்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ். லெட்சுமணன், பேச்சிப் பாண்டியன், பொதுக்குழு உறுப்பி னர்கள் பி.எம்.சரவணன், நடராஜன், மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன்,கிரிஜா குமார்,மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், துணைச் செயலாளர்கள் பிரபு பாண்டியன்,அப்துல் கையூம்,சுதா மூர்த்தி, பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை,பகுதி செயலாளர்கள் நமச்சிவாயம் (நெல்லை) அன்டன் செல்லத்துரை (பாளை) துபாய் சாகுல் (மேலப்பாளையம்) மானூர் ஒன்றிய செயலாளர்கள் மேற்கு அன்பழகன்,கிழக்கு அருள்மணி, தெற்கு கல்லூர் மாரியப்பன்,பேரூர் செயலாளர்கள் செல்வபாபு, பேச்சிகுட்டி,அணி நிர்வாகிகள் கருப்பசாமி கோட்டையப்பன்,காமினிதேவன்,

பலராமன்,மகேஸ்வரி, சௌந்தரம் முத்துராஜ், மேரி,அனிதா,பத்மா, மேகலா,ரேவதி அசோக், அலிப் மீரான், சாய்பாபா உள்பட நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர,பகுதி கழக நிர்வாகிகள், பேரூர், ஒன்றிய கழக நிர்வாகிகள், வட்ட,கிளைக் கழக நிர்வாகிகள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,பாக முகவர்கள் கழக உடன்பிறப்புகள் திரளாக கலந்து கொண்டனர்.

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. 33வது வட்டக் கழகம் சார்பாக கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஆயிரம் ஏழை குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வட்டச் செயலாளர் மானகிரி கே.ராஜேஷ் கண்ணா, மாமன்ற உறுப்பினர் ஆர்.மாளவிகா தலைமையில் நடைபெற்றதில் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மா.ஜெயராம், ம.ஒச்சு பாலு, மேயர் இந்திராணி பொன் வசந்த், மூவேந்திரன், சி.சின்னம்மாள், அக்ரி கணேசன், சரவண புவனேஸ்வரி, பி.டி.மணிமாறன், முத்து கணேசன், செய்யது அபுதாஹிர், ஏ.கே.ஆறுமுகம், வைகை பரமன், கண்ணன், குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், திரளான பொதுமக்கள் பங்கேற்றார்கள்.